වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

ANNUAL REPORT

2020



දේශීය වෛද්‍ය විද්‍යායතනය

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்

INSTITUTE OF INDIGENOUS MEDICINE

කොළඹ විශ්වවිද්‍යාලය

கொழும்பு பல்கலைக்கழகம்

UNIVERSITY OF COLOMBO

தொலைநோக்கு

ஆயுர்வேத, யூனானி மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் மிகச் சிறந்த நிறுவனமாக ஆகுதல்.

செயற்பணி

இலங்கையில் பாரம்பரிய மருத்துவ முறைகளின் முன்னேற்றத்திற்கு அவசியமான அறிவைப் பரப்புவதற்கான கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

பணிப்பாளரின் மதிப்புரை



2020-ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது அடைவுகள் பற்றி அறிக்கையிட இது வாய்ப்பாக அமைந்ததையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். நிலவுகின்ற கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இது மிகவும் தீர்க்கமான ஆண்டாக அமைந்தது. அதனால், சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க, கல்விசார் மற்றும் நிருவாக செயற்பாடுகள் பெரும் சிரமங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சகல விரிவுரைகளும் சில பரீட்சைகளும் 'ஒன்லைன்' முறைமைக்கு மாற்றப்பட்டதன் காரணமாக சகல மட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் தொற்றுநோய் காலப்பகுதியில் செயற்பாடின்றி இருக்காததுடன், சிகிச்சையக பாடங்கள் சார்பாக நேரடியாக பரீட்சைகளில் தோற்ற இறுதியாண்டு மாணவர்கள் வருகை தருமாறும் வேண்டிக்கொள்ளப்பட்டனர்.

கல்விசார்/ நிருவாக/ கல்விசாரா/ மாணவர் கட்டமைப்புக்கள் ஊடாக உள்ளக தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக நடாத்தப்பட்ட BAMS மற்றும் BUMS கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு நிறுவகத்தினால் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டதுடன், அவை அனைத்தும் எமது கற்பித்தல் மற்றும் ஆய்வு திறன்களை மேலும் விருத்திசெய்து, சிறப்பிக்கும் வகையில் இலக்கு வைக்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு செயற்பாட்டின் மூலம், மீளாய்வு குழு IIM-இற்கு வருகைதந்து, சுதேச மருத்துவம் தொடர்பான மருத்துவர்களை உருவாக்குவதற்காக கற்பித்தல் நோக்கத்துகான பணியாட்தொகுததியினர் மற்றும் IIM-இல் பெற்றுக்கொள்ளக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை வினைதிறனுடன் பயன்படுத்துவதை பாடத்திட்டத்தின் கல்விசார் செயல்திறனுடன் பரீட்சிப்பதன் ஊடாக BAMS மற்றும் BUMS கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. அதனால், IIM-இற்கு அதன் சக்தி, சவால்கள், குறைபாடுகள் மற்றும் வாய்ப்புக்கள் என்பவற்றை இனங்கண்டுகொள்ள முடிந்ததுடன், கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக மீளாய்வு குழுவின் மூலம் வழங்கப்பட்ட சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

எனினும், கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக எமது செயல்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமல் போனது. மருத்துவ நிறுவகத்தின் செயல்பாட்டுத் திட்டத்தின் மிக முக்கிய இலக்குகளை மீள செயலூக்கப்படுத்தி இந் நாட்டின் சுதேச மருத்துவ முறையின் முன்னோடியாக விளங்குவதற்கு நிறுவகம் முயற்சி எடுத்தது.

நிறுவகத்தினது தொலைநோக்குக்கு இணங்க இடைவிடாது செயற்பட்டதுடன், அடைந்து கொண்ட வெற்றிகள் சம்பந்தமாக பெருமையடைகிறது. கல்விசார் பணியாளர் உறுப்பினர்களுக்காக கலப்பு கற்றல் சம்பந்தமான பயிற்சி செயலமர்வுகள் உட்பட நிறுவகம் வருட இறுதியின் போது இலக்கு வைக்கப்பட்ட கருத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தது. நாம் தற்போது கற்பித்தல் சார் முறைமையாக கலப்பு கற்றலை நடைமுறைப்படுத்துவதுடன், மிக்க உத்வேகத்துடனும் நல்லெண்ணத்துடனும் எதிர்காலம் பற்றி

எதிர்பார்த்திருக்கிறோம். எதிர்வரும் ஆண்டில் பாடத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்புவசதிகள் சார் அபிவிருத்தியின் ஊடாக சிறந்த உண்ணாட்டு மருத்துவர்களை உருவாக்குவதற்கு எமது புதிய கல்வி உபாயங்களை ஆரம்பிப்பது தொடர்பாகவே எமது கவனத்தை செலுத்துகிறோம். புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இருக்கும் பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் சம்பந்தமாக 2020-ஆம் ஆண்டு முழுவதும் பாடத்திட்ட அபிவிருத்தி குழுவின் (CDC) மிகப் பாரிய அழுத்தம் சம்பந்தமாக நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் கடந்த வருடத்தில் எமது பாரம்பரிய மற்றும் அதிசிறப்பான வெற்றிகளை வலுவூட்டுவதற்காக எமது அர்ப்பணிப்புமிக்க பணியாட்தொகுதியினருக்கும், திறமைவாய்ந்த மாணவ மாணவிகளுக்கும் அவர்களது ஆற்றல்கள் சார்பாக உச்சம்வரை செல்வதற்கு ஊக்கப்படுத்தவும் உதவி வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

2020-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சார் முன்னேற்றம் வருமாறு.

2020 – 2024 உபாய திட்டத்தை அபிவிருத்தி செய்தல் பாரிய வெற்றியாக அமைந்தது அதில் நிறுவகத்தின் குறிக்கோள்களை அர்த்தமுள்ளதாக முன்னுரிமைப்படுத்தி குறிப்பிட்ட வேலைத் திட்டங்களுக்கு ஏற்ப இனங்கண்டதனால் ஆகும். உபாய திட்ட குறிக்கோள்களானது உண்ணாட்டு மருத்துவம் தொடர்பான உயர் கல்விசார் கேள்வியை அதிகரித்தல், கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை உயர்த்துதல், ஆய்வு, புத்தாக்கம் மற்றும் முயற்சியாண்மை என்பவற்றை வலுவூட்டுதல், சமூக - பொருளாதார அபிவிருத்தி சார்பாக உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தின் (IIM) பங்களிப்பு, சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பினை அதிகரித்தல், IIM நிறுவக பௌதிக மற்றும் அழகுணர்ச்சி சார் சுற்றாடல் மற்றும் பங்குதாரர்களின் திருப்தி ஆகியவற்றை மேம்படுத்துதல், நிதி முகாமைத்துவம் மற்றும் வலுவாதாரநிலை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல் மற்றும் IIM நிறுவகத்தின் தரத்தையும் கொள்திறனையும் உயர்த்துதல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. 2020-ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட விடயங்கள் ஒழுங்காக அமுல்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக செயல்பாட்டுத் திட்டமானது காலாண்டு முறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

மேலும், புதுமுக மாணவர்கள் சார்பான பகிடி வதையை குறைப்பதற்காக IIM தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், சகல மாணவர்களுக்கும் பணியாட்தொகுதியினருக்கும் உகந்த கற்பித்தல் மற்றும் கற்றல் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

2020 செயல்பாட்டுத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க விடயங்கள் வருமாறு.

நிறுவகமானது, ஆறு திணைக்களங்களை (ஆயுர்வேத சம்பந்தமாக 04 திணைக்களங்கள் மற்றும் யூனானி சம்பந்தமாக 02 திணைக்களங்கள்) கொண்ட சுதேச மருத்துவ நிறுவக பீடமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவொன்றை வரைய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு ஏற்ப மருத்துவ மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டமொன்று 2017/2018 இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. BAMS மற்றும் BUMS பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை பேணிச் செல்வதற்காக தற்போதுள்ள பாடத்திட்டமும் மறுசீரமைக்கப்பட்டது. IIM இல் பிரதான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கட்டடங்கள்

சார் முன்மொழிவுகள் இரண்டு (ஒன்று, 8 மாடிகள் கொண்ட கட்டடமொன்று மற்றும் இரண்டாவது, ஆண்களுக்கான புதிய விடுதியொன்று என்பவற்றை நிர்மாணித்தல்) முறையான வழியூடாக திறைசேறிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிறுவகத்தில் காணப்படும் இடவசதியின்மையை நிவர்த்தி செய்வதற்காக நாம் இதற்கு அதிகூடிய முன்னுரிமையளித்து செயற்பட்டோம்.

மேலும், ஆயுர்வேத உடல்மசாஜ் சிகிச்சை மற்றும் மருந்தாக்கவியல் பற்றிய குறுங்கால பாடநெறிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். ஆயுர்வேத தொடர்பாக புதிய சான்றிதழ் பாடநெறியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது 2021 இல் நடைமுறைப்படுத்தப்படும். பட்டப்பின்படிப்பு திப்ளோமா பாடநெறிகள் ஐந்து தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

எமக்கு இன்னும் மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதுடன், இந்த அறிக்கை நிறுவகம் நல்ல முன்னேற்றத்தை அடைகின்றது என்பதை வெளிக்காட்டுவதாக நான் கருதுகிறேன். இவை அனைவற்றுக்கும் முதலாவாக நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் எனது தலைமைத்துவத்தின் மீது நல் அபிமானத்தை காட்டியமை, அவர்களால் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் குறிக்கோள்களுக்கு இணங்கவும் உரிய கால வரையறைக்குள்ளும் செயற்பாடுகளை நிறைவேற்றியமை தொடர்பாக நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் குறிப்பாக, ஆயுர்வேத மற்றும் யூனானி பிரிவுகளின் முன்னாள் மற்றும் தற்போதய தலைவர்களுக்கு அவர்கள் நிறுவகத்திற்கும் எனக்கும் வழங்கிய மிகப் பாரிய ஒத்துழைப்புக்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பிரதி பதிவாளர், பிரதி நிதிப்பொறுப்பாளர் மற்றும் நிருவாக பணியாட்தொகுதியினர் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். IIM-மானது மிகச்சிறந்த முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்காக சகல கல்விசாரா பணியாட்தொகுதியினரிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும்.

உயர் அதிகாரத்திலுடையவர்களின் வழிகாட்டுதலுக்கு அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் சுதேச மருத்துவ பீடமொன்றாக உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தை மாற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது வெற்றியென்பது உண்ணாட்டு மருத்துவ முறையின் வெற்றியாகும். எமது முகாமைத்துவ சபை, கல்விசார், நிருவாக, கல்விசாரா பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவ, மாணவிகளின் இடைவிடாத ஒத்துழைப்பின் மூலம் நிறுவகம் எதிர்வரும் 2021-ஆம் ஆண்டு சார்பான சவால்களுக்கும் வெற்றிகளுக்கும் தயாராக இருக்கிறது.

சிரேஷ். பேராசி. பீ.ஏ. பரணகம
பணிப்பாளர்

உள்ளடக்கம் **பக்க இல.**

01.	**நிறுவகத்தின் அதிகாரம்**		**1**
	1:0	உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் (IIM) பற்றிய அறிமுகம்	1-6
	1.1	கட்டளைச்சட்டம்	7
	1.2	முகாமைத்துவ சபை	7-8
	1.3	பணிப்பாளர்	9-10
	1.4	கல்விசார் குழுக்கள்	10
		1.4.1 ஆயுர்வேத திணைக்களம் சார் குழு	10-11
		1.4.2 யூனானி திணைக்களம் சார் குழு	11
02.	**கற்கைசார் திணைக்களங்கள், அலகுகள் மற்றும் நிலையங்கள்**		**11**
	2.1	கற்கை திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள் / ஆயுர்வேத	11
	2.2	கற்கை திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள் / யூனானி	12
	2.3	தகவல் தொழில்நுட்பம் (IT) நிலையம் மற்றும் ஆங்கில மொழி அலகு	12
	2.4	நூலகம்	12-13
	2.5	நிருவாகப் பிரிவுகள்	14
03.	**உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் பற்றிய ஓர் கண்ணோட்டம்**		**14**
	3.1	கூட்டங்கள் மற்றும் குழுக்கள்	14
	3.2	நியமனங்கள் மற்றும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள்	15
	3.3	பணியாளர்கள் சார் மாற்றங்கள் – 2020	16
	3.4	பதவிநிலை அங்கத்தவர்கள் எண்ணிக்கை	16
	3.5	நிருவாக பணியாளர்கள் பற்றிய விபரம்	17
	3.6	நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரம் – 2020	17
	3.7	கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரம்	18
	3.8	பணியாளர்களுக்கான திறன் விருத்திசார் பயிற்சி – 2020	18
	3.9	விசேட செயற்பாடுகள்	18-20
	3.10	ஆய்வு, புத்தாக்கம் மற்றும் பிரசுரங்கள்	21
	3.11	தேசிய, சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்பு	21-22
	3.12	புனரமைப்புக்கள் மற்றும் நிர்மாணித்தல்கள் - 2020	22
04.	**மாணவர் பற்றிய விபரம்**		**22**
	4.1	BAMS மற்றும் BUMS பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம்	22
	4.2	ஆயுர்வேத, யூனானி மருத்துவ பட்ட குறிக்கோள்களும் நோக்கங்களும்	23-24
	4.3	பட்டதாரி மாணவர் சேர்த்துக்கொள்ளல் (2020.12.31 இல் உள்ளபடி)	24-25
	4.4	மாணவர் நலனோம்புகை	25
		4.4.1 நிதி சார் உதவிகள்	25-26
		4.4.2 மாணவர், மாணவி விடுதிகள்	27
	4.5	நிறுவகத்தின் மாணவர் சங்கங்கள்	28
	4.6	ஆயுர்வேத போதனா வைத்தியசாலை	28
05.	**நிதி மற்றும் கணக்கீடு பற்றிய விபரம்**		**29-30**
06.	**செயலாற்றுகை அறிக்கை 2020 தர உத்தரவாத குழு (QA Cell)**		**31-32**
07.	**நிலைபேறான அபிவிருத்தி**		**33-37**
08.	**கணக்கீடு அறிக்கைகள்**		**41-76**
09.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையும் அதற்கான பதில்களும்**		**77-89**

01. அறிமுகம்

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரித்தானிய காலனித்துவ நாடாக காணப்பட்ட அப்போது சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கையில் சுதேச மருத்துவ முறையொன்று காணப்பட்டது. ஆனால் சுதேச மருத்துவ கல்வியை வழங்குவதற்கு எந்தவொறு கல்லூரியும் இருக்கவில்லை. 3 சங்கங்கள் அல்லது அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பாரம்பரிய மருத்துவ அறிவை பாதுகாப்பதற்கும், கீழைத்தேய மருத்துவ முறையில் ஈடுப்பட்டவர்களது தொழில்வாண்மை ரீதியான அந்தஸ்தினை பாதுகாப்பதற்கும் அவற்றை பேணுவதற்குமான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை இவை மேற்கொண்டன. இந்த அமைப்புகளாவன "சிங்கள மருத்துவ சங்கம் (1891), ஸ்ரீலங்கா வைத்திய மகா மண்டலய (1901), ஸ்ரீலங்கா சமாஜ பிரதிசன்ஸ்கரன சங்கமய (1915). சேர் சொலமன் ஆர். டயஸ் பண்டாரநாயக்க, எப்.ஆர். சேனாநாயக்க, கே. பாலசிங்கம், டொனால்ட் உபயசேக்கர, ஆனந்த குமாரசுவாமி போன்ற சிறந்த ஆளுமைகளும் சிறந்த தேசப்பற்றாளர்களும் இந் நோக்கத்திற்காக நிதியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

1926-ஆம் ஆண்டு முதல் முறையாக சுதேச மருத்துவ முறை தொடர்பில் அக்கறை செலுத்தி வந்த குழுவொன்று இந்த மருத்துவ முறையை பின்பற்ற முனைப்புடையவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் முகமாக போதனா வைத்தியசாலைக்கு அருகில் கல்லூரி ஒன்று தாபிக்கப்பட வேண்டுமென பிரேரித்தது. அப்போதைய சட்டநிர்ணய சபையானது (ராஜ்ய மந்திரன சபாவ) 'ஆயுர்வேத சம்மேளன சபா' என்ற தலைப்பில் ஆலோசணை சபையொன்றை 1928 இல் தாபித்தது. அதன் தவிசாளராக டாக்டர். கே. பாலசிங்கம் பணியாற்றினார். இந்த குழுவின் விதப்புரைகளை அடிப்படையாக கொண்டு 1929 யூன் 10 ஆம் திகதி "சுவதேசிய வைத்திய வித்தியாலய" (சுதேச மருத்துவ கல்லூரி) தாபிக்கப்பட்டது. அப்போதைய இலங்கை ஆளுநரான சேர் ஹபட் ஜெம்ஸ் ஸ்டென்லி அவர்களால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது பொரல்ல கொட்டா வீதியிலுள்ள பவர் கட்டடத்தில் தாபிக்கப்பட்டது. மேற்கத்திய மருத்துவ தகைமை படைத்தவரும் ஆயுர்வேத அறிவியல்கள் பயிற்சி தொடர்பில் காத்திரமான அறிவை கொண்டவருமான இந்தியாவை சேர்ந்த டாக்டர் ஏ.என்.என். பனிக்கர் அவர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு அதேவேளையிலே இலங்கையில் யூனானி மருத்துவ முறையை விருத்தி செய்யும் முகமாக டாக்டர் எச்.எம். ஜபர் மற்றும் டாக்டர். எச். அஹமட் ஆகியோரும் இந்தியாவிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்டனர்.

1941-ஆம் ஆண்டு 17 இலக்க சுதேச மருத்துவ கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டமையானது சுதேச மருத்துவ துறையில் மற்றுமொரு முக்கிய நிகழ்வாகும். அப்போதய சுகாதார அமைச்சரும் சுதேச மருத்துவ ஆலோசனை சபையின் தவிசாளருமான கௌரவ எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களினால் ஆசிய தராதரத்திற்கு நிகராக கல்லூரியில் கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் முகமாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது. 1961-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 1961-ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம், 1941-ஆம் ஆண்டின் 17-ஆம் இலக்க சுதேச மருத்துவ கட்டளைச்சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டு, கல்லூரியானது சுதேச மருத்துவ அரசாங்க கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஆயுர்வேத கல்லூரி மற்றும் வைத்தியசாலை சபை ஆகியவற்றின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆயுர்வேத சுகாதார பராமரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கும் ஆயுர்வேத, யூனானி மற்றும் சித்த தொடர்பான கருவி முறைகளை மேம்படுத்தி பேணுவதற்குமான மேற்கொள்ளபட்ட ஒரு நடவடிக்கை இதுவாகும். ஆயுர்வேத மருத்துவ சபை, ஆயுர்வேத கல்லூரி மற்றும்

வைத்தியசாலை சபை, ஆயுர்வேத ஆராய்ச்சி குழு, ஆயுர்வேத மருந்து உருவாக்க குழு ஆகிய நான்கு நியாயாதிக்க சபைகள் உருவாக்கப்பட்டன.

புதிய ஆயுர்வேத சட்டத்தின் கீழ் 1963 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை திப்ளோமா (DIMS) என்ற தகைமை ஆனது ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை திப்ளோமா (DAMS) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1977 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ கல்லூரியானது உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் என உள்வாங்கப்பட்டதுடன், 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைகழகத்துடன் இது இணைக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி, 258 ஆம் இலக்கத்தை கொண்ட அரசாங்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 1977 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ஆயுர்வேத நிறுவக சட்டத்தின் மூலம் இது மேற்கொள்ளபட்டது. ஆயுர்வேத, யூனானி, சித்த துறையில் தகைமை படைத்த மருத்துவர்களை உருவாக்கும் நோக்குடன் இந்த படிமுறை மேற்கொள்ளபட்டது. 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 1979.12.21 ஆம் திகதிய 67/14 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 1979 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க சுதேச மருத்துவ நிறுவக கட்டளை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் சித்த பிரிவானது மாற்றப்பட்டு யாழ்பாண பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இந்த நிருவகம் இணைக்கப்பட்டதன் பின்னர் இந்த பல்கலைக்கழகம் செனட் சபையின் அனுமதியுடன் இதன் பாடத்திட்டத்தில் பல்வேறு விதமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அத்தகைய பிரதான சீர்திருத்தங்களில் ஒன்றாக ஆயுர்வேத, சித்த, யூனானி மருத்துவம் ஆகிய துறைகளில் நிபுனத்துவம் பெற்றவர்களது உதவி பெறப்பட்டது. குறிப்பாக உலக சுகாதார அமைப்பிற்காக ஆயுர்வேத ஆலோசகராக பேராசிரியர் பி.என்.வி. குருப்பு அவர்களிடம் இருந்து நிபுனத்துவம் சார்ந்த ஆலோசனைகள் பெறப்பட்டன.

1977 ஆம் ஆண்டு நிறுவகம் தாபிக்கப்பட்டதன் அடிப்படையில் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்படிப்பு (BAMS), யூனானி மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்படிப்பு (BUMS) ஆகிய இரண்டு பட்டப்படிப்பின் மூலம் கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. நிறுவகத்தின் 2 பிரிவின் கீழ் இவை மேற்கொள்ளப்பட்டதுடன் 1983 ஆம் ஆண்டில் முதல் தகுதி மாணவர்கள் பட்டத்தினை பெற்றுக்கொண்டனர். 1992.10.26 கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் போது இந்த பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே பொரல்லை தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை செயன்முறை அறிவு மற்றும் திறன்களை பெற்றுக்கொடுப்பதற்கான வளங்களை வழங்கும் மத்திய நிலையமாக விசேடமாக சிகிச்சையக அமைப்பினுள் செயலாற்றுகிறது. நிறுவகத்திடம் கற்பித்தலில் பொறுப்பான பட்டமேற்படிப்பு பட்டத் தகைமைகளைக் கொண்ட கல்விசார் பணியாட்தொகுதியினரைக் கொண்டிருப்பதுடன், கடந்த ஐந்து வருட கல்வியாண்டின் பொழுது மாறுபட்ட 23 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற சுதேச மருத்துவ பட்டதாரிகளை உருவாக்கும் முகமாக பாடத்திட்டமானது ஆயுர்வேத, யூனானி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விஞ்ஞான கற்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. ஒவ்வொரு கல்வியாண்டும் 3 தவணை

காலத்தின் பொழுது 30 வாரங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. 2 மத்தியகால விடுமுறைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும் வருடாந்த பரிட்சைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பரிட்சையும் எழுத்து மூலமான வினாத்தாள், வாய்மொழி மூலமான பரிட்சை மற்றும் செயல்முறை அல்லது சிகிச்சை சார்ந்த அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தில் (IIM) இரண்டு கற்கைத் திணைக்களங்கள் காணப்படுகின்றன.

1. ஆயுர்வேத கற்கைத் திணைக்களம்

இலங்கையின் ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான ஆரம்பகால குறிப்புகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த இலங்கை அரசனான, அதேவேளை சிறந்த மருத்துவனான இராவனனுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. வரலாற்று ரீதியாக நோக்குகையில் இராமயனத்தில் குறிப்பிடப்பட்டடுள்ள இராவனனின் நற்பெயர் பற்றி ஆயுர்வேத மருத்துவத்தில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியின் இந்தியாவில் இமையமலை அடிவாரத்தில் நடைபெற்ற மருத்துவ கருத்தரங்கொன்றில் இலங்கையை இராவனன் பிரதிநிதித்துவம் செய்ததாக இராமாயணம் குறிப்பிடுகிறது. நான்கு வகையான பலங்குடியினர் வாழ்ந்தனர் அவையாவன யக்ஸ , ரக்ஸ, நாக மற்றும் இலங்கையை சேர்ந்த வேடர்கள். வரலாற்று ஆதார ஆய்வு அறிவுத்துறையின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான பின்வரும் புத்தகங்களை இலங்கை அரசனான இராவனன் எழுதியதாக குறிப்பிடப்படுகின்றது. அவையாவன அரகபிகாசய, நதிவிக்னானய, குமாரதந்தரய மற்றும் உதிசன்தரய.

இலங்கையில் வளமான மருத்துவ தாவரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில இலங்கைக்கு உரியதாகும். இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான தாவரங்கள் இங்கும் பயன்படுத்தப்படுகின்றன. தொழுகந்த மற்றும் ருமசல்லா போன்ற தாவரங்களின் பகுதிகள் இந்தியாவின் இமைய மலையிலிருந்து வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அரசன் இராமனின் குரங்கான அனுமானினால் அரசம் இலங்கைக்கு கொடுவரப்பட்டதாக கருதப்படுகின்றது. அனுராதபுரம், பொலனறுவை, மெதிரிகிரிய மற்றும் பொம்பரிப்பு ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட ஆதிகால மருத்துவ நடைமுறைகள் பற்றிய சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட புதைகுழிகளில் இருந்து தோன்றி எடுக்கப்பட்டன.

மிஹின்தலை, மெதிரிகிரிய மற்றும் பொலனறுவையில் அலகான ஆகிய ஆதிகால மன்னர்களினால் தாபிக்கப்பட்ட ஆகிகால வைத்தியசாலைகளின் கட்டமைப்பு எச்சங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. கல்வெட்டுகள் மற்றும் மருந்துகள் மற்றும் ஏனைய உபகரணங்களை கண்டுபிடித்தல் ஆகியவற்றின் மூலமாக அத்தகைய வைத்தியசாலைகளின் அடையாளம் தாபிக்கப்பட்டது. மகாவம்சம், சோளவம்சம் ஆகியவற்றின் பிரகாரம் ஆரம்பகால பல அரசர்கள் இலங்கையில் ஆயுர்வேத மருத்துவத்தை விருத்தி செய்வதற்கான அர்பணிப்பாக பல சேவைகளை வழங்கியுள்ளனர். அத்தகைய நடைமுறைகளுக்கான உதாரணங்களாக பண்டுகாபய மன்னன் (கி.மு. 4 ஆம் நூற்றாண்டு), சேன மன்னன் (கி.பி 851-885), புத்ததாச மன்னன் (கி.பி.362-409), தாதுசேன மன்னன் (கி.பி.460-478) ஆகியோரைக் குறிப்பிடலாம். அத்தகைய ஆயுர்வேத சார்ந்த வரலாற்று சான்றுகளின் பிரகாரம் சுதேச

மருத்துவம் தொடர்பில் மகத்தான வரலாறு ஒன்றை இலங்கை பெற்றுள்ளதை அவதானிக்ககூடியதாக உள்ளது. இருப்பினும் வெளிநாட்டு படையெடுப்பின் காரணமாக 16 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் பல பின்னடைவுகளை எதிர்க்கொண்டது. அதன் பின்னர் சுயமாக சுயாதின நடவடிக்கைகள் மூலம் ஆயுர்வேத விருத்தியடைந்தது. வருடாந்தம் மரபு ரீதியான செயன்முறை ஒன்றாக இது பின்பற்றப்படுகின்றது. (இது பெற்றோரிடம் இருந்து பிள்ளைகள் கற்றுக்கொள்ளுதல்) உதாரணம்: எஸ் வெதகம (கண் மருத்துவம்), கெடி வான (கட்டிகள் மற்றும் நச்சுசீக்கட்டு ஆகியவற்றுக்கு சிகிச்சை அளித்தல்), சர்பவிச (நச்சியல்) பிஸ்சுபலு (விசர்நாய்க்கடி நோய்) விதும் பிலிசும் (எரிகாயம்), கெடும் பிதும் (எலும்பு முறிவு மற்றும் உடற்பாகம் விலகுதல்).

தற்சமயம் சுமார் 16,800 பதியப்பட்ட ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் காணப்படுகின்றனர். இவர்களுள் சுமார் 5000 இற்கு மேற்பட்டவர்கள் கல்வி ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் தகைமை பெற்று எமது தேசத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்றிவருகின்றனர்.

2. யூனானி கற்கைத் திணைக்களம்

பெரிசல்ஸ் காலத்துடன் (கி.மு 562-430) யூனானி மருத்துவத்தின் வரலாறு ஆரம்பமாகின்றது. அரேபிய நாகரிகத்தின் போது இது வளர்ச்சியடைந்தது. இதனை அரேபிய மருத்துவம் எனவும் அழைக்கின்றனர். மத்திய காலப்பகுதியில் கடற்பயணிகளாக காணப்பட்ட அரேபியர்கள் குறிப்பாக இந்தியாவுடன் வர்த்தக ரீதியாக உறவுகளை பேணி வந்தனர். இருப்பினும் பின்னர் இலங்கையுடன் நேரடியான வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இதன் காரணமாக பலர் இலங்கையில் குடியேறினர். குறிப்பாக கரையோரப்பகுதியில் குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை சேர்ந்த முஸ்லிம்கள் இந்த முறையை பாதுகாத்து அதனை பரப்பி வந்தனர். 21 ஆம் நூற்றாண்டிலும் கூட இதனை மேற்கொண்டு வருகின்றனர். இதில் 'போரா' இனத்தை சேர்ந்தவர்கள் (கி.மு 460-360) ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இன்றும் கூட "மருத்துவத்தின் தந்தை" ஆக கருதப்படுகின்றனர். கேளிக்கை கோட்பாட்டிலே இவரே சிறந்து விளங்கியவர்.

யூனானி மருத்துவத்தின் அடுத்த சிறந்த பிரமுகராக சிறந்த தத்துவ ஞானியாக அரிஸ்டோட்டல் (கி.மு 384-322) திகழ்ந்தார். அரேபியர்களுக்கு உடற்கூறியல் பற்றிய அறிவை ஜெலிநோஸ் (கெலன் கி.மு 131-210) அறிமுகம் செய்தார்.

அன்று முதல் யூனானி மருத்துவத்தின் வளர்ச்சிற்கும் விருத்திற்கும் பலர் தமது காத்திரமான பங்களிப்புகளை வழங்கினார்கள். யூனானி மருத்துவ முறையில் மிகவும் புகழ் பெற்ற வைத்தியராகவும் அதேவேளை தத்துவஞானியாகவும் காணப்பட்டவர் இபின் சினா (அபிசினியா 937-1037) மருத்துவம் தொடர்பிலான இவரது பங்களிப்புகளில் "கெனோன் ஒப் மெடிசின்" என்ற கலைக்களஞ்சியம் மருத்துவம் பற்றிய சிறந்த புத்தகமாகும். முதலாம் நூற்றாண்டில் அரேபியர்கள் இந்த முறையை இலங்கைக்கு கொண்டு வந்தனர். பின்னர் இதே முறையை முஸ்லிம்கள் விருத்தி செய்தனர். இலங்கையில் காணப்பட்ட மன்னர்களதும் ராஜியங்களதும் சிறந்த குடும்ப மருத்துவ ஆலோசகராக அரேபிய மருத்துவர்கள் காணப்பட்டதாக வரலாறு கூறுகிறது. யூனானி மருத்துவ முறையின் சிறந்த பெருமானம் அதனது நோய் தீர்க்கும் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேதத்துடன் அது ஒன்றாக கலந்தது. இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறையினுள் இது உள்வாங்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டின் ஆயுர்வேத சட்டத்தின் மூலம் இலங்கையில் காணப்பட்ட

சகல விதமான பாரம்பரிய மருத்துவ முறையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் ஆயுர்வேத என்ற சொல்லானது ஆசிய நாடுகளின் சுதேச மருத்துவமான ஆயுர்வேத, யூனானி, சித்த மற்றும் ஏனைய பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக இடம் பெற்ற அந்நிய படையெடுப்புகளிகள் காரணமாக அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவும் மன்னர்களின் பலம் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டது. பல நூற்றாண்டுகளாக மன்னர்களின் அனுசரனையுடன் காணப்பட்ட ஆயுர்வேத மருத்துவமும் வீழ்ச்சி கண்டது. ஏனைய புராதான கலைகள் மற்றும் கைவினை பொருட்கள் ஆகியன இவற்றுடன் வீழ்ச்சி கண்டன. இதேவேளை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஆயுர்வேத மருத்துவர்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆயுர்வேத உள்ளடங்களாக உள்ளூர் கலைகள் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றை சீர் செய்யும் நோக்குடன் சிலோன் சமூக மறுசீரமைப்பு சங்கம் உருவாக்கப்பட்டது. நிதியில்லாமல் முடங்கி கிடந்த ஆயுர்வேத மருத்துவ துறையை மேம்படுத்துவது இந்த அமைப்பின் முக்கிய முன்னுரிமையாக காணப்பட்டது. காலனித்துவ அரசாங்கங்கள் அவசியமான உதவிகளை வழங்காததன் காரணமாக தனது இலக்குகளை மேம்படுத்துவதற்காக தனிநபர்களின் பங்களிப்பில் தங்கியிருக்க வேண்டிய நிற்பந்தம் இதற்கு ஏற்பட்டது. மொத்தமாக 131,000 ரூபா வரை தொடர்ச்சியாக உதவி தொகை வழங்குவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. கீழைத்தேய மருத்துவம் விஞ்ஞானம் என்ற பெயரின் கீழ் இந்த பணம் வைப்பிலிடப்பட்டது. பரந்த நம்பிக்கையாளர் சபை மூலம் இந் நிதி நிர்வகிக்கப்பட்டது. இதன் தவிசாளராக பால் ஈ. பிரிஸ் காணப்பட்டார் ஆயுர்வேத வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை 1916 ஆம் ஆண்டில் இதன் நம்பிக்கையார் சபை தெரிவித்தது.

ஜி.பி. விக்ரமராச்சி, ஆர் புத்ததாச ஆகியோரை பயிற்சிக்காக கல்கத்தாவிற்கு அனுப்புவதாக நம்பிக்கையாளர் சபை 1917-ல் தெரிவு செய்தது. உண்மையில் ஆயுர்வேத மருத்துவத்தை விருத்தி செய்வது தொடர்பில் அவர்களை தெரிவு செய்தமையானது ஒரு தீர்க்கதரிசனமான விடயமாகும். ஏனெனில் பின்னர் இத் தொழிற்துறை வளர்ந்து வருவதற்கு அவர்களது பங்களிப்பு மிகவும் மகத்தானதாக காணப்பட்டது. 1929-இல் பண்டித் விக்ரமாராச்சி தனது சொந்த பாடசாலையை கம்பஹாவில் தாபித்தார்.

1929 வரை நம்பிக்கையாளர் சபை தொடர்ச்சியாக மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. 1929 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ கல்லூரி தாபிக்கப்பட்ட பொழுது டாக்டர். கே பாலசிங்கம், சேர். ராசிக் பரித் ஆகியோரின் கடும் முயற்சிகளின் காரணமாக சுதேச மருத்துவ கல்லூரியில் ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவ பிரிவுகளுடன் யூனானி மருத்துவ முறையும் தாபிக்கப்பட்டது. யூனானி மருத்தும் தொடர்பான விரிவுரையராக இந்தியாவிலிருந்து டாக்டர் எம்.ஏ. அஹமட் மற்றும் டாக்டர் எச்.எம். ஜபர் ஆகியோர் அழைக்கப்பட்டனர். இக்கல்லூரியில் யூனானி மருத்துவத்தை ஆரம்பிப்பதற்கும் அதனை ஒழுங்கமைப்பதற்கும் முக்கிய மூலகர்த்தாவாக இவர்கள் காணப்பட்டனர். இக்கல்லூரியில் யூனானி பிரிவை வைத்திருப்பதற்கு டாக்டர் எச்.எம். ஜபர் மற்றும் அவருடன் அப்போதய சுதேச மருத்துவ உறுப்பினர் சேர் ராசிக் பரித் ஆகியோர் கடுமையாக உழைத்தனர். யூனானி பிரிவின் பிரதான விரிவுரையாளராக டாக்டர். எச்.எம். ஜபர் பணியாற்றினார். டாக்டர். எம்.எச்.எம். ஹபில், டாக்டர் எம்.ஏ.எம். ஜலால்டீன் மற்றும் டாக்டர் எம்.ஐ. வில்லியம் ஆகியோர் யூனானி பிரிவின் தலைவர்களாக பதவி வகித்தனர். இக்காலப் பகுதியில் யூனானி பிரிவை விருத்தி செய்வதற்காக இவர்கள் அனைவரும் கடுமையாக உழைத்தனர்.

நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



01. நிறுவகத்தின் அதிகாரம்:

1.1 கட்டளைச்சட்டம்

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகமானது, 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1.2 முகாமை சபை

(அ) பதவிவழி உறுப்பினர்கள்

சிரேஷ்ட பேராசி. பிரியானி ஏ. பரணகம
பணிப்பாளர் (தவிசாளர்)

வைத்தியர் கே.சி. பெரேரா (2020.08.24 வரை)
வைத்தியர் எஸ்.பீ. மொல்லிகொட (2020.09.17-இல் இருந்து)
பிரிவுத் தலைவர்/ ஆயுர்வேத

வைத்தியர் பி.எம். நஜீப் (2020.04.27 வரை)
பேராசி. எம்.எஸ்.எம். ஷிபா (2020.05.26-இல் இருந்து)
பிரிவுத் தலைவர்/ யூனானி

திரு. கே.ஆர். உடுவாவல (2020.08.24 வரை)
திரு. ஜீ.சி.எஸ். திலக்கரத்ன (2020.09.28-இல் இருந்து)
மேலதிக செயலாளர்/ நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு

திரு. வீ. செனவிரத்ன (2020.05.26 வரை)
திரு. எச்.டபிள்யூ.எம். புஷ்பலதா மெனிக்கே (2020.06.22-இல் இருந்து)
மேலதிக செயலாளர்/ சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

திரு. ஏ.எம்.ஆர்.என். ராஜபக்ஷ (2020.02.03-இல் இருந்து)
பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்

திரு. கே.டீ.எஸ். குமாரதுங்க
ஆணையாளர்/ ஆயுர்வேத

வைத்தியர் ஸ்வர்ணா கலுதொடகே

பணிப்பாளர்/ பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம்

வைத்தியர் ஆர்.எம்.கே.பி. ரத்நாயக்க (2020.02.03 வரை)

வைத்தியர் எஸ். சங்கமித்த (2020.02.24-இல் இருந்து)

பணிப்பாளர்/ ஆயுர்வேத போதனா வைத்தியசாலை

பேராசி. ஜெனிபர் பெரேரா (2020.02.24 வரை)

பேராசி. டபிள்யூ. திசாநாயக்க (2020.05.26-இல் இருந்து)

பீடாதிபதி/ மருத்துவ பீடம்

பேராசி. எம்.சி. வீரசிங்ஹ

டாக்டர் கே. சிறிதேவா

டாக்டர் எஸ். செனவிரத்ன

மருத்துவ பீடத்தின் அங்கத்தவர்கள்

வைத்தியர் எஸ்.எம்.எச். சேனபண்டா (2020.05.26 வரை)

வைத்தியர் எம்.எச்.என். கருணசிறி (2020.06.22-இல் இருந்து)

ஆயுர்வேத மருத்துவ சபையின் அங்கத்தவர்

திரு. எஸ்.எஸ்.பி.டீ.பீ. சொய்சா

திரு. எம்.டீ.டீ. பீரிஸ்

பேராசி. கபில செனவிரத்ன

டாக்டர் டீ. சேனசேக்கர

டாக்டர் பி.எம். ரிஷாத்

டாக்டர் எம்.டீ.ஜே. அபயகுணவர்தன

டாக்டர் எச். தர்மவிஜய

பேராசி. எச்.ஏ.எஸ். ஆரியவன்ச

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்

திரு. எம்.எல். வர்ணசூரிய (AAL).

(பிரதி பதிவாளர்)

செயலாளர்

1.3 பணிப்பாளர் – சிரேஷ்ட பேராசிரியர் பிரியானி ஏ. பரணகம

கொழும்பு பல்கலைக்கழக, உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பேராசிரியர் பிரியானி ஏ. பரணகம, 2021 பெப்பிரவரி 10-ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான கடமைகளை பொறுப்பேற்றார். அவர், களனி பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் திணைக்களத்தின் இரசாயனவியல் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியரும் ஆவார். மசாலாக்கள், அத்தியாவசிய எண்ணெய்கள் மற்றும் சுதேச மருத்துவம் ஆகியன சார்பாக பெறுமதி சேர்த்தல் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட இயற்கை உற்பத்தி சம்பந்தமான இரசாயனவியலாளரும் ஆவார். இவர், இலங்கை இரசாயனவியல் நிறுவகத்தின் முன்னாள் தலைவருமாவார். இவர், இலங்கை இரசாயனவியல் நிறுவகம் (Institute of Chemistry Ceylon), பட்டய இரசாயனவியலாளர்கள் (Chartered Chemist - CChem), றோயல் இரசாயனவியல் சங்கம் (Royal Society of Chemistry) ஆகியவற்றின் தோழமை அங்கத்தவருமாவார். அத்துடன் இவர், பொதுநலவாய நாடுகள் அமைப்பினது இரசாயனவியல் சார் நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகிறார். இவர், ஆயுர்வேத திணைக்களத்தின் சூத்திரங்கள் குழுவின் தவிசாளரும் மற்றும் ஆயுர்வேத மருத்துவ கவுன்சிலின் உப தவிசாளரும் ஆவார்.

இவர், களனி பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பற்றிய கௌரவப் பட்டத்தை 1986 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார். இவர், 1990 ஆண்டு தகுதிகாண் விரிவுரையாளராக களனி பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டதுடன், இவர் 1991 இல் சேதன இரசாயனவியல் சார் தத்துவ முதுமாணி (M.Phil) பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் இணைந்து கொண்டார். இவர், 1994 இல் ஐக்கிய இராச்சியத்தினது கிளஸ்கோவ் பல்கலைக்கழகத்தின் மூலம் உயிரியல் சேதன இரசாயனவியல் பிரிவில் தனது கலாநிதி (PhD) பட்டத்தை பெற்றுக்கொண்டார். இலங்கைக்கு திரும்பி வந்ததன் பின்பு, இவர் இயற்கை உற்பத்தி இரசாயனவியல் பற்றிய சுயாதீன ஆய்வுப் பணிகளை தொடங்கினார். 2003 இல் இவர் பேராசிரியராகவும், அதன் பின்பு 2011 இல் சிரேஷ்ட பேராசிரியாகவும் பதவி உயர்த்தப்பட்டதுடன், 2012-இல் இவர் இரசாயனவியல் சம்பந்தமான தலைமைத்துவத்தை பெற்றார். 2016 யூன் முதல் 2017 அக்டோபர் வரை இலங்கை இரசாயனவியல் நிறுவகத்தினது இரசாயன விஞ்ஞானங்கள் கல்லூரியின் பீடாதிபதியாக பணியாற்றினார். இவர், 2009 முதல் 2012 வரை களனி பல்கலைக்கழக இரசாயனவியல் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றினார். இவர், இலங்கை இரசாயனவியல் நிறுவகம், பட்டய இரசாயனவியலாளர்கள் (Chartered Chemist - CChem), றோயல் இரசாயனவியல் சங்கம் (Royal Society of Chemistry) ஆகியவற்றின் தோழமை அங்கத்தவராவார். இவர், இலங்கையிலுள்ள பல தொழில்வாண்மை அமைப்புக்களின் உறுப்பினருமாவார். உலக விஞ்ஞான அகடமி (The World Academy of Science - TWAS) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட விஞ்ஞானத்தினுள் தொழிலை வடிவமைப்பது பற்றிய மகாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பை இவர்

பெற்றுக்கொண்டதுடன், இம் மகாநாடு TWAS மானியம் பெறுகின்ற உலகின் முன்னனி இரசாயனவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. இவர், பல தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மானியங்கள் மற்றும் விருதுகள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும், இவருக்கு 2015 இல் இரசாயனவியல் சம்பந்தமான சிறந்த ஆய்வுக்காக டாக்டர் சி.எல். த சில்வா தங்கப் பதக்கம் மற்றும் 2008 இவரது ஆய்வு தொழில்சார் அடைவுகளுக்காக பேராசிரியர் எம்.யூ.எஸ். சுல்தான்பாவா தங்கப் பத்தகம் ஆகியன வழங்கப்பட்டன. இவர், சூசிகைபடுத்திய பருவ சஞ்சிகைகளில் ஆய்வுப் பத்திரங்கள் 54 இற்கும் மேற்பட பிரசுரித்துள்ளதுடன், புத்தகங்கள்/ புத்தக அத்தியாயங்கள் 11 இவரால் எழுதப்பட்டு அல்லது திருத்தி அமைக்கப்பட்டுள்ளதுடன், தொடர்பாடல்கள் 120 இற்கும் மேற்பட பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர், 21-இற்கும் அதிகமான பட்டமேற்படிப்பு மாணவர்களை மிகச் சிறப்பாக மேற்பார்வை செய்துள்ளதுடன், தற்போது இயற்கை உற்பத்திகளின் தனிமைப்படுத்தலும் இயல்பாய்வும், மசாலாக்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்களின் பகுப்பாய்வு, இயற்கை உற்பத்திகளின் பெறுமதி சேர்ப்பும் சுவட்டு உலோகங்களின் நச்சுத் தன்மையும், உயிரியல் பூச்சிகளின் வளர்ச்சி வரை வரிசைப்படுத்திய இரசாயனவியலின் பல வேறுபட்ட பிரிவுகள் சம்பந்தமான நான்கு பட்டமேற்படிப்பு மாணவர்களை மேற்பார்வை செய்கின்றார். இவரது ஆய்வு சம்பந்தமாக ஆர்வமாக இருப்பது தாவரங்கள் மற்றும் எண்டோலிசெனிக் பங்கசுக்களிலிருந்து உயிரியல் தொழிற்பாடுசார் இயற்கை உற்பத்திகளின் தனிமைப்படுத்தல் மற்றும் இயல்பாய்வு, உயிரியல் பூச்சிக்கொல்லிகளின் விருத்தி, இயற்கை உற்பத்திகளின் பெறுமதி சேர்ப்பு ஆகியனவாகும். இவற்றுடன், இலங்கையின் பல்கலைக்கழகங்கள் பலவற்றின் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளில் பங்குபற்றிய அனுபவங்களையும் இவர் கொண்டுள்ளார்.

1.4 கல்விசார் குழுக்கள்

1.4 (1) ஆயுர்வேத திணைக்களம் சார் குழு

உண்ணாட்டு மருத்துவம் சார்ந்த சகல கிளைகள் சம்பந்தப்பட்ட கற்கைப் பாடநெறிகள், பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்யும் பொறுப்பு ஆயுர்வேத திணைக்களம் சார் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 15 (1) பிரிவுக்கு ஏற்ப 2020 ஆண்டில் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது துறைசார் குழு பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுர்வேத திணைக்களம்சார் குழுத் தலைவர் - தலைவர்/ ஆயுர்வேத கற்கைசார் திணைக்களம் - வைத்தியர் கே.சி. பெரேரா (2020.01.01 முதல் 2020.09.16 வரை)

ஆயுர்வேத திணைக்களம்சார் குழுத் தலைவர் - தலைவர்/ ஆயுர்வேத கற்கைசார் திணைக்களம் - வைத்தியர் எஸ்.பீ. மொல்லிகொட (2020.09.17 முதல் 2020.12.31 வரை)

எல்லா நிரந்தர விரிவுரையாளர்களும் ஆயுர்வேத திணைக்களம் சார் குழுவின் உறுப்பினர்களாவர்.

1.4 (2) யூனானி திணைக்களம் சார் குழு

BUMS சம்பந்தப்பட்ட கற்கைப் பாடநெறிகள், பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்யும் பொறுப்பு யூனானி திணைக்களம் சார் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 15 (1) பிரிவுக்கு ஏற்ப 2020 ஆண்டில் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது துறைசார் குழு பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

யூனானி திணைக்களம் சார் குழுத் தலைவர்:

பேராசி. எம்.எஸ்.எம். ஷிபா, தலைவர்/ கற்கை சார் திணைக்களம் (யூனானி)

சகல நிரந்தர விரிவுரையாளர்களையும் உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தின் யூனானி பட்டதாரிகளான வெளிவாரி அங்கத்தவர்கள் மூவரையும் கொண்ட யூனானி திணைக்களம் சார் குழு, யூனானி கற்கைத் திணைக்களத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

02. கற்கைசார் திணைக்களங்கள் மற்றும் அலகுகள்

2.1 ஆயுர்வேத கற்கைத் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள்

ஆயுர்வேத கற்கைத் திணைக்களம் பின்வரும் பெயரில் எட்டு (08) அலகுகளை உள்ளடக்கியுள்ளது.

I. மௌலிக சித்தாந்த (Maulika Siddhantha)
II. திரவ்யகுண விஞ்ஞான (Dravyaguna Vignana)
III. ஸ்வஸ்தவுரித்த (Swasthavritta)
IV. காய சிகித்சா (Kaya Chikitsa)
V. தேஷிய சிகித்சா (Deshiya Chikitsa)
VI. பிரசூதிதந்தர கௌமாரபுத்ய (Prasutitantra Kaumarabhritya)
VII. சல்ய சாலகய (Shalya Shalakya)
VIII. இணைந்த விஞ்ஞானங்கள் (Allied Science) (ஆயுர்வேத மற்றும் யூனானி ஆகிய இரு திணைக்களங்களுக்கும் பொதுவானது).

2.2 யூனானி கற்கைத் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள்

யூனானி கற்கைத் திணைக்களம் பின்வரும் பெயரில் எட்டு (08) அலகுகளை உள்ளடக்கியுள்ளது.

I. குல்லியத் (Kulliyat)
II. இல்முல் அத்வியா (Ilmul Advia)
III. மொஹலிஜாத் (Moalejat)
IV. நிஸ்வான் வா கபாலத் (Niswan va Qabalat)
V. இல்முல் ஜரஹத் (Ilmul Jarahat)
VI. ஹிப்ஸான் ஏ சேஹாத் (Hifzan e Sehath)
VII. தேஷிய இலாஜ் (Deshiya Ilaj)
VIII. இணைந்த விஞ்ஞானங்கள் (Allied Science) (ஆயுர்வேத மற்றும் யூனானி ஆகிய இரு திணைக்களங்களுக்கும் பொதுவானது).

2.3 தகவல் தொழில்நுட்ப (IT) மற்றும் ஆங்கில மொழி அலகு

தகவல் தொழில்நுட்ப (IT) மற்றும் மொழி ஆய்வுகூடமானது HETC கருத்திட்டத்தின் கீழ் 2014 மார்ச் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது, மாணவர்களது செயன்முறைப் பயிற்சிகளுக்காக 39 கணினிகளையும் இணைய வசதிகளுடன் 16 கணினிகளையும் வழங்கியுள்ளது.

2.4 நூலகம்

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் நூலகம், 1929 ஆம் ஆண்டில் ஆயுர்வேதக் கல்லூரி தாபிக்கப்படுவதுடன் உருவாக்கப்பட்டது. நிறுவகத்தின் கல்விசார் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான வளங்களைப் பெற்றுக்கொடுத்து, நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வது நூலகத்தின் பிரதான குறிக்கோளாகும். நூல்கள் சேகரிப்பில் முக்கியமாக ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவத்துறைகள் உள்ளடங்குகின்றன. தற்போதய சஞ்சிகைகள் சேகரிப்பில் அச்சுப்பதிப்புசார் சந்தா செலுத்தப்படும் 21 சஞ்சிகைகளும் உள்ளடங்கியுள்ளன.

நூலகப் பணியாளர்கள் பற்றிய விபரம் – 2020

பதவி	எண்ணிக்கை
சிரேஷ்ட உதவி நூலகப் பொறுப்பாளர் (தரம் I)	01
சிரேஷ்ட உதவி நூலகப் பொறுப்பாளர் (தரம் II)	01
பதவிநிலை உதவி அலுவலர்	02
நூலக மற்றும் தகவல் உதவியாளர் (தரம் II)	01
நூலக மற்றும் தகவல் உதவியாளர் (தரம் III)	02
நூலக கவனிப்பாளர் (தரம் I)	01
புத்தகம் கட்டுநர் (தரம் II)	01
வேலை உதவியாளர் (தரம் II)	01

கொள்வனவு - ரூ. 106,860.00 பெறுமதியான நூல்களும் பருவ சஞ்சிகைகளும் மற்றும் ரூ. 1,327,886.81 பெறுமதியான பருவ சஞ்சிகைகளும் நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டன.

நன்கொடைகள் - 10 நூல்கள் நன்கொடையாக கிடைத்தன.

தொழில்நுட்ப சேவை - 3,770 இரவல் நூல்கள் மற்றும் 403 உசாத்துணை நூல்கள் 2020-ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்டன.

- ஓலைச் சுவடி சேகரிப்புகளிலுள்ள எழுத்துக்களை கருப்பாக்குதல்.

விசேட சேவைகள் - நூல் இரவல் சேவைகள், உசாத்துணை சேவைகள், ஆவண விநியோக சேவை (மாணவர் ஆதரவு சேவை) நிகழ்கால தகவல் விழிப்புணர்வூட்டல் சேவைகள், நூலகங்களுக்கு இடையிலான நூல் கடன் பரிமாற்றல் சேவை, பிரதிபண்ணல் சேவை மற்றும் இணையதள வசதிகள்.

நூலக பயன்பெறுநர் - பட்டதாரி மாணவர்கள் - ஆயுர்வேத - 934
- யூனானி - 265
கல்விசார் பணியாட்கள் - 88
கல்விசாரா பணியாட்கள் - 122
போதனாசிரியர்கள் - 33

2.5 நிருவாகப் பிரிவுகள்

நிறுவகத்தில் பின்வரும் எட்டு நிருவாகப் பிரிவுகள் உள்ளன.

1. பணிப்பாளரின் அலுவலகம்
2. பிரதி பதிவாளரின் அலுவலகம்
3. பிரதி நிதியாளர் அலுவலகம்
4. நிதிப் பிரிவு
5. மாணவர் பதிவுசெய்தல் மற்றும் நலன்புரி பிரிவு
6. பரீட்சை பிரிவு
7. தாபன பிரிவு
8. பொது நிருவாகம் மற்றும் மூலதன வேலைகள் பிரிவு

நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவு, பொது நிருவாகம் மற்றும் மூலதன வேலைகள் ஆகியன பிரதி பதிவாளரின் கீழ் இயங்குகின்றது. உதவிப் பதிவாளர் தாபனப் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கின்றார். உதவிப் பதிவாளர் – மாணவர் அலுவல்கள், மாணவர் அலுவல்களுக்கு பொறுப்பாக இருக்கின்றார். நிறுவகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்குப் பிரதி நிதியாளர் பொறுப்பாக இருப்பதுடன், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியவற்றுக்கு பொறுப்பாக சிரேஷ்ட உதவி நிதியாளரொருவரும், வழங்கல்களுக்கு பொறுப்பாக மற்றுமொரு சிரேஷ்ட நிதியாளரொருவரும் (SAB) பொறுப்பாக இருக்கின்றனர்.

03. உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

3.1 கூட்டங்கள் மற்றும் குழுக்கள்

	கூட்டங்களின் பெயர்	**ஆண்டின் போது நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை**
(i)	முகாமை சபை	11
(ii)	நிதி குழு	04
(iii)	பரீட்சை உப குழு	04
(iv)	திட்டமிடல் மற்றும் நிர்மானித்தல் குழு	06
(v)	கல்விசார் அலகு கூட்டம்	09
(vi)	திணைக்களம் சார் குழு/ ஆயுர்வேத	21
(vii)	திணைக்களம் சார் குழு/ யூனானி	20
(viii)	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு	04
(ix)	நிருவாகத் தலைவர்களின் குழு	05

3.2 நியமனங்கள் மற்றும் பணியாட்கள் பற்றிய தகவல்கள்:

ஊழியர்கள் வகைப்படுத்தல்

சேவை வகை	சம்பள குறியீடு	அங்கீகரி-க்கப்பட்ட பதவியணி	உள்ளபடி ஊழியர்
ஆரம்ப மட்டம்			
1. ஆரம்ப மட்டம் – தேர்ச்சி அற்ற	PL- 1	46	23
2. ஆரம்ப மட்டம் – பகுதி தேர்ச்சி பெற்ற	PL- 2	13	12
3. ஆரம்ப மட்டம் – தேர்ச்சி பெற்ற	PL- 3	14	10
இரண்டாம்நிலை மட்டம்			
1. முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சாரா	U- MN 1	66	37
2. முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சார்	U-MT 1	14	5
3. இணைந்த அலுவலர்கள் – பிரிவு 2	U-MN 2		1
4. இணைந்த அலுவலர்கள் – பிரிவு 1	U-MN 3		4
5. பதவிநிலை உதவி அலுவலர்/ அதியுயர் மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவி அலுவலர்கள்	U-MN 4		12
மூன்றாம்நிலை மட்டம்			
1. கல்விசார் துணை – பிரிவு 2	U-AS 1	1	0
2. கனிஷ்ட நிறைவேற்றுநர்/ முகாமையாளர்	U-EX 1	2	2
3. கல்விசார் துணை – பிரிவு 1	U-AS 2	5	4
சிரேஷ்ட மட்டம்			
1. மருத்துவ அலுவலர்கள்	U-MO 1	-	-
2. பிரதன மருத்துவ உத்தியோகத்தர்	U-MO 2	-	-
3. இடை நிலை நிறைவேற்றுநர்கள்	U-EX 2	4	4
4. இடை நிலை நிறைவேற்றுநர்கள்	U-EX 2 (a)	2	
5. சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள்	U-EX 3	-	
6. விரிவுரையாளர்கள்	U-AC 3	94	70
7. இணைந்த பேராசிரியர்கள்	U-AC 4		
8. பேராசிரியர்கள்/ சிரேஷ்ட பேராசிரியர்கள்	U-AC 5		7

மொத்த நியமனங்கள்:

கல்விசார் துணை	-	0
நிருவாகம்	-	0
கல்விசாராத	-	0
கல்விசார் துணை	-	0

3.3 2020 ஆண்டில் பணியாளர் சார் மாற்றங்கள்:

விபரம்	கல்விசார்	நிருவாகம்	கல்விசாராத	கல்விசார் துணை
நியமனங்கள்	-	-	-	-
நிரந்தரமாக்கல்	3	-	11	01
பதவி உயர்வுகள்	10	-	05	-
இடமாற்றல்கள்	-	3	-	-
சேவை நீடிப்புக்கள்	3	-	-	-
ஓய்வு பெறுதல்கள்	1	-	04	-

- **2020.12.31-இல் உள்ளபடி பதவியணி விபரம்**

பதவியணி	அங்கீகரிக்கப்-பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்கள்
நிருவாக பணியாளர்கள்	87	78	09
கல்விசார் துணை பணியாளர்கள்	06	03	02
கல்விசாரா பணியாளர்கள்	153	101	52
நிருவாகப் பணியாளர்கள்	07	07	-


3.4 பணியாளர் அங்கத்தவர்கள் எண்ணிக்கை – 2020:

(i) நிரந்தர கல்விசார் மற்றும் கல்விசார் துணை பணியாளர்கள் - 81

(ii) நிரந்தர நிருவாகப் பணியாளர்கள் - 07

(iii) நிரந்தர கல்விசாரா பணியாளர்கள் - 101

பணியாளர் அங்கத்தவர்கள் எண்ணிக்கை - 2020:




3.5 நிருவாகப் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் - 2020

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	எண்ணிக்கை
பிரதி பதிவாளர்	01	01
பிரதி நிதியாளர்/ சிரேஷ்ட உதவி நிதியாளர்	02	03
உதவி நிதியாளர்	01	00
உதவிப் பதிவாளர்	02	02
மொத்தம்	06	06

3.6 நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் - 2020

	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	நியமனம் உறுதி செய்யப்படாத விரிவுரையாளர்	விரிவுரையாளர் (தகுதிகாண்)	விரிவுரையாளர்
ஆயுர்வேத	சிங்களம்/ ஆங்கிலம்	1	2	37	2	5	1
யூனானி	தமிழ்/ ஆங்கிலம்	-	4	17	-	3	4
மொத்தம்		1	4	56	2	8	5

நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் – 2020



3.7 கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரங்கள் - 2020

	சிரேஷ்ட பணியாளர்	கனிஷ்ட பணியாளர்	சிற்றூழியர்
பணிப்பாளரின் அலுவலகம்	1	1	1
நிர்வாகக் கிளை	-	9	6
தாபனக் கிளை	1	2	1
பரீட்சைக் கிளை	2	1	2
மாணவர் பதிவுசெய்தல் மற்றும் நலன்புரி பிரிவு	-	5	1
நிதிப் பிரிவு	1	7	2
ஆயுர்வேத கற்கைத் திணைக்களம்	1	7	15
யூனானி கற்கைத் திணைக்களம்	-	5	2
நூலகம்	2	3	3
தகவல் தொழில்நுட்ப (IT) பிரிவு	-	-	2
மருத்துவ நிலையம்	-	1	1
கல்விசார் மற்றும் பிரசுரங்கள்	-	3	1
பராமரிப்பு பிரிவு	-	-	12
மொத்தம்	8	44	49

முழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 98 ஆகவுள்ள கல்விசாராத பணியாளர்கள், கற்கைசார் உதவி பணியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம்சாரா, பயிற்றப்பட்ட, அரைவாசி பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத பணியாளர்கள் என நிருவாகப் பிரிவு, கல்விசார் பிரிவு, பராமரிப்பு மற்றும் நிலத்தோற்றப் பிரிவுகளின் கீழ் சேவையாற்றுகின்றனர். நிறுவகத்தின் நாளாந்த செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக அவர்களினால் வழங்கப்படும் பங்களிப்பானது மிக முக்கியமானதாகும்.

3.8 பணியாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி - 2020

கல்விசாரா பணியாட்கள்	வெளியாக பயிற்சி	-
	தொழில்சார் பயிற்சி	-
எல்லா பணியாளர் வகையினரும்	பெறுகைசார் முகாமைத்துவ செயலமர்வு	-
	நிதி சார் முகாமைத்துவ செயலமர்வு	-
	தகவல் தொழில்நுட்ப (IT) செயலமர்வு	-
நிருவாக பணியாட்கள்	தொழில்சார் பயிற்சி	-

3.9 விசேட செயற்பாடுகள்

* IIM கிரிக்கெட் சந்திப்பு (2020.01.18)
* சமயம்சார் செயற்பாடு (வருடாந்த பிரித் பாராயணம் நிகழ்ச்சி - 2020.02.29)
* BAMS மற்றும் BUMS சார்பாக மலேரியா - தொற்றுநோயியல் பற்றிய விரிவுரை (2020.03.12)
* தேசிய மற்றும் சர்வதேச வெபினார் (Webinar) (2020.06.28)
* சுதேச மூலிகைத் தாவரங்கள் நடுதல் நிகழ்ச்சித்திட்டம் (2020.09.17)

IIM கிரிக்கெட் சந்திப்பு - (2020.01.18)



சமயம் சார் செயற்பாடுகள் (வருடாந்த பிரித் பாராயணம் நிகழ்ச்சி - 2020.02.29)



BAMS மற்றும் BUMS சார்பாக மலேரியா தொற்றுநோயியல் பற்றிய விரிவுரை - (2020.03.12)



தேசிய மற்றும் சர்வதேச வெபினார் (Webinar) - (2020.06.28)





சுதேச மூலிகைத் தாவரங்கள் நடுதல் நிகழ்ச்சித்திட்டம் - (2020.09.17)



3.10 ஆய்வு, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் பிரசுரங்கள்

விடயம்	பிரசுரிக்கப்பட்டவை	சமர்ப்பிக்கப்பட்டவை
பிரித்தெடுப்புக்களில் எண்ணிக்கை	**05**	
ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை	**17**	**03**
சஞ்சிகைகளின் எண்ணிக்கை	**17**	
புத்தகங்களின் எண்ணிக்கை	**04**	
ஆக்கங்களின் எண்ணிக்கை	**17**	**05**
மொத்தம்	**60**	**08**





3.11 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்பு

01. கொவிட்-19 முகாமை செய்வதற்காக ஆயுர்வேத, யூனானி மற்றும் பாரம்பரிய மருத்துவவியலின் சக்தி பற்றிய தேசிய சர்வதேச வெபினார் செயலாளராக ஒழுங்கு செய்யப்பட்டது.

02. NITM மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் CMO - சிறுவர் தொற்றாத நோய்கள் மற்றும் அவை சார் முகாமைத்துவம் பற்றிய செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

03. IIM -இன் கல்விசார் பணியாளர் உறுப்பினர்களுக்காக திறன் விருத்திசெய்தல் சார்பான செயலமர்வு தொடர் நடாத்தப்பட்டது.

04. சுதர்ஷன பாணி ஆராய்ச்சி கண்டுபிடிப்பானது, இலங்கையின் புத்தாக்குநர்களது முயற்சியாக இலங்கையில் கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராக போரிடுவதற்காக இனங்காணப்பட்டுள்ளதுடன், அவர்களது புத்தாக்கத்தை செயன்முறையாக பயன்படுத்த வசதியேற்படுத்தப்பட்டது.

5. புதிய கலவை சுதர்ஷன பாணி (Sudarshana Suspension), சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் மூலம் அமைக்கப்பட்ட கொவிட்-19 இற்கு எதிரான தேசிய சபையினால் கொவிட்-19 நோயாளர்களுக்கான சிகிச்சையொன்றாக பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

06. டீ.எம்.சி. பிரபாத் ஜயதிலக்க மற்றும் DR. ஓ.ரீ.எம்.ஆர்.கே.எஸ்.பி. கலவான ஆகியோரால் சுதேச மருத்துவ சூத்திரமொன்றைப் பயன்படுத்தி மூலிகை சிரப் (herbal syrup) தயாரிக்கப்பட்டது.

07. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் யெமன் நாட்டுப் பெண்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் ஆயுர்வேத 'தினஷார்ய' (நாளாந்த பழக்கவழக்கங்கள்) உடன் சுகாதாரமான வாழ்க்கை முறைமை தொடர்பான செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

08. நீர்கொழும்பு, அல்ஹிலால் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு யூனானி பொருட் கண்காட்சியொன்று ஏற்பாடுசெய்து, நடாத்தப்பட்டது – 2020 பெப்பிரவரி 25-27.

3.12 புனரமைப்புக்கள் மற்றும் நிர்மானித்தல்கள்

ஒப்பந்தத்தின் பெயர், இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரர்	ஒப்பந்த தொகை – ரூ.
அம்பகஹமுல்ல மண்டபம் புனரமைப்பு – உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் IIM/AA/1/6 இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (வழங்குதல் கடிதம் திகதி: 2020.12.17)	**ரூ. 4,802,925/=**

04. மாணவர் பற்றிய விபரம்:

4.1 BAMS மற்றும் BUMS இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம்

(i) ஆயுர்வேத மருத்துவமும் சத்திரசிகிச்சையும் சார்ந்த இளமாணிப் பட்டம் (BAMS)

(ii) யூனானி மருத்துவமும் சத்திரசிகிச்சையும் பற்றிய இளமாணிப் பட்டம் (BUMS)

இந்தப் பாடநெறியானது ஐந்து (05) வருட நிறுவகக் கற்கைப் பயிற்சியையும் ஒரு வருட பயிலுநர் மருத்துவர் பயிற்சியையும் உள்ளடக்கியதாகும். புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான விரிவுரைகள் ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்படுகின்றன. விரிவுரைகள் (IIM) நிறுவகத்தில் நடாத்தப்படுவதுடன், சிகிச்சைசார் கற்கைகளானது பிரதானமாக ஆயுர்வேத போதனா வைத்தியசாலையுடன் தொடர்புபட்டதாக மேற்கொள்ளப்படுகின்றன. புதிய கற்கைப் பாடநெறி கல்விப்பருவம் அடிப்படையில் நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கல்விப்பருவங்களை உள்ளடக்கியிருக்கும். ஒவ்வொரு கல்விப்பருவமும் 15 வாரங்களை கொண்டமைந்திருக்கும். ஒவ்வொரு கல்விப்பருவத்தின் இறுதியிலும் பரீட்சை நடாத்தப்படும்.

4.2 ஆயுர்வேத மற்றும் யூனானி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குகளும் குறிக்கோள்களும்

இலக்கு 1: சுதேச மருத்துவம் சார் உயர் கல்விக்கான கேள்வியை அதிகரித்தல்.

குறிக்கோள்கள்:

(i) சுதேச மருத்துவம் சார் உயர் கல்வியை வலுப்படுத்துதல்.

(ii) தொழில்வாய்ப்பை அதிகரிக்கச்செய்தல்.

இலக்கு 2: கற்கைசார் நிகழ்ச்சித்திட்டங்களில் சிறப்பான நிலையை அடைதல்.

குறிக்கோள்கள்:

(i) பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி பட்டதாரி மாணவர்களது பண்புகளை உயர்த்துதல்.

(ii) உலகலாவிய தரத்திற்கு இணையான பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை உயர்த்துதல்.

இலக்கு 3: ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் சார்பாக சிறப்பான நிலையை அடைதல்.

குறிக்கோள்கள்:

(i) IIM-இல் ஆராய்ச்சி கலாச்சாரத்தை வலுவூட்டுதல்.

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஆராய்ச்சி வலையமைப்பை வலுப்படுத்துதல்.

(iii) புத்தாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

இலக்கு 4: நாட்டினது சமூக-பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல்.

குறிக்கோள்கள்:

(i) சமூக தேவைகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை தீர்த்து வைத்தல் மூலமாக சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

(ii) IIM-இல் சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல்.

(iii) சுதேச மருத்துவ உற்பத்திகளுக்காக பெறுமதி சேர்ப்பதை அதிகரித்தல்.

(iv) பாரம்பரிய மருத்துவ முறைமைகளை தக்கவைத்து பேணிவருதல்.

இலக்கு 5: IIM-சார்பான தேசிய மற்றும் சர்வதேச அங்கீகரிப்பை உறுதிப்படுத்துதல்.

குறிக்கோள்கள்:

(i) IIM-சார்பான தேசிய மற்றும் சர்வதேச பார்வையை உறுதிப்படுத்துதல்.

(ii) கல்விசார் சிறப்புத் தன்மை மீதான பார்வையை உறுதிப்படுத்துதல்.

(iii) UOC தரவரிசையை வலுப்படுத்துவதன் ஊடாக உயர் உலகலாவிய தரவரிசையை அடைதல்.

இலக்கு 6: பௌதிக மற்றும் அழகிய சூழலை மேம்படுத்துதல் மற்றும் IIM-இன் பங்குதாரர்களது திருப்தியை உறுதிசெய்தல்.

குறிக்கோள்கள்:

(i) பௌதிக சூழலை மேம்படுத்துதல்.

(ii) அழகிய சூழலை மேம்படுத்துதல்.

(iii) பங்குதாரர்களின் திருப்தியை உறுதிசெய்தல்.

இலக்கு 7: சிறந்த நிருவாகம் மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றை உறுதிசெய்தல்.

குறிக்கோள்கள்:

(i) உயர் பண்பாற்றல் மற்றும் திறன்மிக்க பணியாளர் குழுவை உருவாக்குதல்.


(ii) சகல மட்டங்களிலும் வினைதிறனுள்ள, பக்கச்சார்பற்ற நிருவாகமொன்றை வழங்குதல்.

(iii) பிரதான திட்டத்தை (master plan) அபிவிருத்திசெய்தல்.

கடந்த ஆறு வருடங்களுக்கான பட்டதாரிகள் உருவாக்கல்

பட்டம் வழங்கிய ஆண்டு	பட்டதாரிகள்		மொத்தம்
	ஆயுர்வேத	யூனானி	
2020	106	50	**156**
2019	120	17	**137**
2018	93	26	**119**
2017	85	27	**112**
2016	79	23	**102**
2015	63	17	**80**

4.3 பட்டதாரி மாணவர் உள்வாங்கல்கள் (2020.12.31-இல் உள்ளபடி)



உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகம், இராஜகிரிய

பட்டதாரி மாணவர் சேர்த்துக்கொள்ளல் (2020.12.31 இல் உள்ளபடி)

உள்வாங்கல்	ஆயுர்வேத			யூனானி		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
2018/19 (1ஆம் ஆண்டு)	35	142	**177**	8	43	**51**
2017/18 (1ஆம் ஆண்டு)	41	128	**169**	4	42	**46**
2016/17 (2ஆம் ஆண்டு)	34	140	**174**	6	43	**49**
2015/16 (3ஆம் ஆண்டு)	31	119	**150**	3	29	**32**
2014/15 (4ஆம் ஆண்டு)	28	103	**131**	12	33	**45**
2013/14 (5ஆம் ஆண்டு)	27	106	**133**	7	35	**42**
மொத்தம்	**196**	**738**	**934**	**40**	**225**	**265**

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை : 1199

4.4 மாணவர் நலனோம்புகை

4.4.1 நிதி உதவிகள்


மாணவர் உதவிப்பணம் மற்றும் மஹபொல புலமைப்பரிசில் ஆகியன மூலம் மாணவர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்படுகிறன.


(i) மஹபொல புலமைப்பரிசில்

மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தினது பங்களிப்பின் அடிப்படையில் திறமை அல்லது பொதுவான வகையில் மாணவரொருவருக்கு மாதாந்தம் ரூ. 5000/- தொகை வழங்கப்படுகிறது.

(ii) மாணவர் உதவிப்பணம்

மாணவர் முழு உதவிப்பணம் அல்லது மாணவர் அரைப்பகுதி உதவிப்பணம் என்பதாக மாணவரொருவருக்கு மாதாந்தம் ரூ. 4000/- அல்லது ரூ. 3900/- தொகை வழங்கப்படுகிறது.





மாணவர்களுக்கான மஹபொல புலமைப்பரிசில் மற்றும் உதவிப்பணம் சார்பான வீதம்

வருடம்	மாணவர் எண்ணிக்கை (மஹபொல)	வீதம் (%)	மாணவர் எண்ணிக்கை (உதவிப்பணம்)	வீதம் (%)
2018/2019 (1ஆம் வருடம்)	112	49.12%	22	9.64%
2017/2018 (1ஆம் வருடம்)	93	42.50%	51	23.72%
2016/2017 (2ஆம் வருடம்)	71	31.83%	116	52.01%
2015/2016 (3ஆம் வருடம்)	56	30.76%	90	49.45%
2014/2015 (4ஆம் வருடம்)	65	36.72%	82	46.59%
2013/2014 (5ஆம் வருடம்)	72	40.90%	70	40.00%
மொத்தம்	**469**	**39.11%**	**431**	**35.94%**

மஹபொல புலமைப்பரிசில் மற்றும் உதவிப்பணம் சார் பணப் பெறுமதி

வருடம்	மாணவர் எண். (மஹபொல)	தொகை	மாணவர் எண். (உதவிப்பணம்)	தொகை
2018/2019 (1ஆம் வருடம்)	112	2856000.00	22	528000.00
2017/2018 (1ஆம் வருடம்)	93	3305000.00	51	1556000.00
2016/2017 (2ஆம் வருடம்)	71	2375000.00	116	3196000.00
2015/2016 (3ஆம் வருடம்)	56	2480000.00	90	3123500.00
2014/2015 (4ஆம் வருடம்)	65	2255000.00	82	2278400.00
2013/2014 (5ஆம் வருடம்)	72	2495000.00	70	1648800.00
மொத்தம்	**469**	**15766000.00**	**431**	**12330700.00**

4.4.2 மாணவ, மாணவிகளுக்கான விடுதிகள்

நிறுவகத்தினால் மாணவ, மாணவிகளுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக இரண்டு பிரதான விடுதிகள் பேணிச்செல்லப்படுகின்றன.

மாணவிகளுக்கான விடுதிகள் - 2020.12.31

ஆண்டு	மாணவிகளின் விடுதி - மொரகஸ்முல்ல விடுதி மற்றும் இல. 330	
	ஆயுர்வேத	யூனானி
1ஆம் வருடம் (2018/2019)	107	34
1ஆம் வருடம் (2017/2018)	29	18
2ஆம் வருடம் (2016/2017)	-	-
3ஆம் வருடம் (2015/2016)	32	-
4ஆம் வருடம் (2014/2015)	38	16
5ஆம் வருடம் (2013/2014)	84	23
மொத்தம்	**290**	**91**

மாணவர்களுக்கான விடுதிகள் - 2020.12.31

ஆண்டு	இல. 12 மெதவெலிகட விடுதி, எசல உயன விடுதி மற்றும் தலங்கம தெற்கு மாணவர்களின் விடுதி			
	ஆயுர்வேத	யூனானி	மொத்தம்	விடுதியின் பெயர்
1ஆம் வருடம் (2018/2019)	22	5	27	இல. 12 விடுதி
1ஆம் வருடம் (2017/2018)	28	02	30	எசல உயன விடுதி – 17 தலங்கம தெற்கு விடுதி - 13
2ஆம் வருடம் (2016/2017)	-	-	-	-
3ஆம் வருடம் (2015/2016)	6	-	6	எசல உயன விடுதி
4ஆம் வருடம் (2014/2015)	8	2	10	மெதவெலிகட விடுதி
5ஆம் வருடம் (2013/2014)	8	1	9	
மொத்தம்	**72**	**10**	**82**	

4.5 நிறுவகத்தின் மாணவர் சங்கங்கள்

நிறுவகத்தின் மாணவர் சங்கமானது, உண்ணாட்டு மருத்துவ மாணவர் குழு என இயங்குகிறது. அதில் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட உத்தியோகத்தர் குழுவொன்றை கொண்டுள்ளது. இந்த மாணவர் குழுவின் கீழ் பிரதான உப குழுக்கள் மூன்று தொழிற்படுகின்றன.

i. கலை உப குழு

கலை மற்றும் கலாசார நடவடிக்கைகள், கலை விழாக்களை ஒழுங்குசெய்தல் மற்றும் மாணவர்களது கலைச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் என்பன இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

ii. ஆயுர்வேத கருத்திட்ட உப குழு

இதன் கீழ் பாடசாலைகளில் ஆயுர்வேத தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், நடமாடும் சிகிச்சை நிலையங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல், *குகுஸ* எனும் பெயரில் விவாத நிகழ்ச்சியொன்றை நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

iii. விளையாட்டுத்துறை உப குழு

வருடாந்த விளையாட்டு விழா மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை ஒழுங்குசெய்தல், புதிய மாணவர்களின் விளையாட்டு விழாவை நடாத்துதல், பல்வேறு விளையாட்டுக்களுக்கு மாணவர்களை பங்குபெறச் செய்தல் மற்றும் உடற்பயிற்சி நிலையங்களை நடாத்திச்செல்லல் என்பன இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

4.6 ஆயுர்வேத போதனா வைத்தியசாலை

